Toronto Community Housing

# வாடகைக்குடியிருப்பாளர்களின் முறைப்பாடுகளுக்கான நடைமுறை

சேவைகள் அல்லது சக வாடகைக்குடியிருப்பாளர்களின் நடத்தைகள் பற்றிய முறைப்பாடு ஒன்று உங்களுக்கு இருந்தால், ரொறன்ரோ சமூக குடியிருப்புகளின் (Toronto Community Housing) தீர்வுகளுக்கான குழுவினரை (Solutions team) நீங்கள் தொடர்புகொள்ளலாம். வாடகைக்குடியிருப்பாளரின் முறைப்பாடுகளை நியாயமான, வினைத்திறனான மற்றும் வெளிப்படையான முறையில், விரைவில் தீர்ப்பதற்காக TCHCஇன் முறைப்பாடுகள் தொடர்பான நடைமுறைகளைத் தீர்வுகளுக்கான குழுவினர் கையாள்கிறார்கள்.

---

## பொதுவான முறைப்பாடுகளின் வகைகள்

### சமூகரீதியான வாழ்வுக்கு ஒவ்வாத நடத்தைகள்



### வெப்பமூட்டல்/குளிரூட்டல்



### மின்தூக்கிகள் (Elevators)



### பராமரிப்பு



## தண்ணீர்வசதிகள் (Plumbing)

---

# இந்த முறைப்பாடுகள் தொடர்பான நடைமுறைகளின் மூன்று கட்டங்கள்

### 1. அறிவித்தல்

உங்களுடைய முறைப்பாடு அல்லது கரிசனையை அறிவிப்பதற்கு தீர்வுகளுக்கான எங்களின் குழுவினரைத் தொடர்புகொள்ளுங்கள்: solutions@torontohousing.ca அல்லது 416-981-6000.

### 2. புலன்விசாரணை

தீர்வுகளுக்கான குழுவினர், உங்களின் முறைப்பாட்டை ஒரு வேலை நாளுக்குள் அங்கீகரிப்பதுடன், அந்த முறைப்பாட்டை உறுதிப்படுத்தும் EasyTrac இலக்கம் ஒன்றை உங்களுக்கு வழங்குவார்கள். பின்னர், அது தொடர்பான புலன்விசாரணையை அவர்கள் ஆரம்பிப்பார்கள்.

### 3. தீர்வு

உங்களின் முறைப்பாட்டைத் தீர்ப்பதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதை எழுத்துமூலம், ஏழு வேலை நாட்களுக்குள் தீர்வுகளுக்கான குழுவினர் உங்களுக்கு விளங்கப்படுத்துவார்கள். உங்களின் முறைப்பாட்டினைத் தீர்ப்பதற்கு ஏழு வேலை நாட்களுக்குள் மேல் எடுக்கும் என்றால், தீர்வுகளுக்கான குழுவினர் உங்களுக்கு இற்றைப்படுத்தல் ஒன்றை வழங்குவார்கள்.

தீர்வுகளுக்கான குழுவினரின் முடிவை நீங்கள் ஏற்கவில்லை என்றால், ombudsman@toronto.ca என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சலிடுவதன் மூலமோ அல்லது 416-392-7062 என்ற இலக்கத்தை அழைப்பதன் மூலமோ ரொறன்ரோவின் முறைப்பாடுகளுக்குப் பொறுப்பான அதிகாரியைத் (Ombudsman) தொடர்புகொள்வதற்கான தெரிவு உங்களுக்கு உள்ளது.

---

## சேவைபெறுநர் பராமரிப்பு மையம் அல்லது கட்டடப் பணியாளரிடமிருந்து தீர்வுகளுக்கான குழு (Solutions team) எவ்வகையில் வேறுபடுகிறது?

பிராந்திய அலுவலகங்கள் மற்றும் உள்ளூர்ச் சேவை மையங்களுடனான சேவைபெறுநர் பராமரிப்பு மையம், நிர்வாகம் தொடர்பான கரிசனைகள் மற்றும் பராமரிப்புத் தொடர்பான பழுதுபார்ப்புகளில் உங்களுக்கு உதவுவதற்காக இருக்கின்றது.

வாடகைக்குடியிருப்பாளர்கள் முன்பே அறிவித்திருந்த முறைப்பாடுகளில், தீர்க்கப்படாமல் இருப்பவற்றைக் கையாள்வது தீர்வுகளுக்கான குழுவினர் பொறுப்பாகும்.

வாடகைக்குடியிருப்பாளர்களுக்கும் பணியாளர்களும் இடையில் நிகழும் சாதாரணமான தொடர்பாடல்கள் வாடகைக்குடியிருப்பாளர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யவில்லை அல்லது அவர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வை வழங்கவில்லை என வாடகைக்குடியிருப்பாளர்கள் உணர்ந்தால் முறைப்பாடுகளுக்கான நடைமுறையை அவர்கள் பயன்படுத்தலாம்.

---

## நேர்மறையான பின்னூட்டங்களைச் சமர்ப்பித்தல்

TCHC பணியாளர்களுடனான உங்களுடைய தொடர்பாடல்களில் நீங்கள் திருப்தியடைந்திருப்பதுடன், அந்தச் சேவை தொடர்பான பாராட்டுக்களைத் தெரிவிப்பதற்கும் நீங்கள் விரும்பினால், அவற்றையும் தீர்வுகளுக்கான குழுவினருக்கு நீங்கள் அனுப்பலாம்.

---

## தொடர்புத் தகவல்கள்

Solutions team (தீர்வுகளுக்கான குழு)
416-981-6000 அல்லது solutions@torontohousing.ca

வலைத்தளம் மற்றும் இணையப் படிவம்:
[torontohousing.ca/complaints](torontohousing.ca/complaints)

இந்தக் கையேட்டை அணுகக்கூடிய அல்லது மொழிபெயர்க்கப்பட்ட ஒரு வடிவத்தில் கோருவதற்குத் தயவுசெய்து தொடர்பு கொள்ளுங்கள்: **416-981-5500** அல்லது **help@torontohousing.ca**.